திரு. வி.கோ. செல்லப்பா அவர்கள் 1985 முதல் 1988 வரை கடலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் அவர்கள் 1977 முதல் 1980 வரையிலும், 1980 முதல் 1984 வரையிலும் மற்றும் 1985 முதல் 1988 வரையிலும் மூன்று முறை சேலம்—2 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. தேனி வெ. பன்னீர்செல்வம் அவர்கள் 1991 முதல் 1996 வரை போடிநாயக்கனூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 46, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

46—

மின் வாரிய அலுவலகக் கட்டடம்

***52508—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2016 பிப்ரவரி 17]

(அ) முதுகுளத்தூர் தொகுதி, கமுதியிலுள்ள மின் வாரிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) உதவி மின் பொறியாளர் நகர், கமுதி மற்றும் உதவி மின் பொறியாளர் தெற்கு ஊரகம், கமுதி ஆகிய பிரிவு அலுவலகங்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும் இந்த பிரிவு அலுவலகங்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் போக்குவரத்து வசதியுள்ள பிரதான இடத்தில் இயங்கி வருகின்றன. எனவே, கமுதி மின் வாரிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், உலகிலேயே மிகப் பெரிய சூரிய மின் சக்தி உற்பத்தி நிலையங்களை முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கமுதி வட்டத்தில் 648 மெகாவாட் மின் உற்பத்தி செய்திட ரூ.4,536 கோடி முதலீட்டினை வழங்கி (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மின் உற்பத்தியையும் தொடங்கி, அதன்மூலம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பையும், இப்பகுதி மக்களுடைய தொழில் வளர்ச்சிக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகுதி மக்களுடைய வாழ்வில் ஒளி விளக்கேற்றிய வெற்றித் திருமகள் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் ஏழையெளிய மாணவர்கள் உயர் கல்வி பெற 5 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டு, இரண்டு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தந்து மற்றும் மீனவ மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த ரூ.9 கோடியில் மீன் இறங்குதளம் அமைத்துத் தந்து இப்பகுதியின் விவசாய மக்களுடைய நீண்ட நாள் கனவுத் திட்டமான வைகை*

புனல் கால்வாய் இணைப்புத் திட்டம் தந்து, 18 கோடி ரூபாயில் கஞ்சம்பட்டி ஓடை திட்டத்தைச் செயல்படுத்தி இருக்கிறார்கள். முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இதுவரையிலும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகக் கட்டடத்தை கிட்டத்தட்ட 4½ கோடி ரூபாயில் கட்டித் தந்து, முதுகுளத்தூர், சாயல்குடி மற்றும் கடலாடி போன்ற ஊர்களில் இருக்கும் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டித் தந்து, கமுதி மற்றும் சாயல்குடி ஆகிய பேரூராட்சிகளுக்கு இரண்டு புதிய கட்டடங்கள் கட்டித் தந்து. . .

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், நீங்கள் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. மு. முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரையூர் மற்றும் கீரனூருக்கு புதிய கால்நடை மருத்துவமனைகளும், முதுகுளத்தூரில் உள்ள சார் கருவூலத்திற்கு புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டித் தந்து, வரலாறு காணாத வளர்ச்சிப் பாதையில், முதுகுளத்தூர் சட்டமன்றத் தொகுதியை வழி நடத்தக்கூடிய மாண்புமிகு வாழும் மனித தெய்வம், கழகத்தினுடைய நிரந்தர பொதுச் செயலாளர் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமுதியில் உள்ள மின் வாரிய அலுவலகக் கட்டடம் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மிகப் பழமையான கட்டடமாகும். அக்கட்டடம் இடியக்கூடிய நிலையில், மிகவும் பழுதடைந்து, மோசமான நிலையில் உள்ளது. எனவே, மேற்படி மின் வாரிய அலுவலகத்திற்கு புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், முதுகுளத்தூர் தொகுதிக்குட்பட்ட பெருநாளி என்ற இடத்திலுள்ள மின் வாரிய அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. அதற்கும் ஒரு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கும் நன்றி சொல்லி, விடைபெறுகிறேன்.